பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஐப்பசி 8 (24—10—68) வியாழன் ★ வெளியூர் : ஐப்பசி 9 (25—10—68) வெள்ளி [இதழ் : 106

# சிந்திய இரத்தமும் செய்த தியாகமும் வீண்போக வேண்டாம்!

சென்னை, அக் 24—

"இன்னும் இரண்டு நாட்களே இருக்கின்றன; சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடும் கழகத் தோழர்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

"அப்படி, தோழர்கள் தங்களைத் திருத்திக்கொண்டு -- கழக வெற்றிச்கு உழைத்து -- அமெரிக்காவிலேயிருந்து திரும்பி வருகிற அண்ணனுக்கு வெற்றிச் செய்தி வழங்கிட வேண்டும்.

"'ஒரு பகுதிதானே நாம்; நம்முடைய தனிப்பட்ட பகையைத் தீர்த்துக் கொள்வோம்' என்று ஒவ்வொருவரும் கருதினால், மொத்தத்தில் விளைவு என்னாகும் என்பதை எண்ணிப்பார்த்திட வேண்டும்.

"நீங்களாக உழைத்து வளர்த்த கட்சியை நீங்களே அழிக்கப் போகிறீர்களா --- சிந்தியுங்கள்!

"**அண்ணாவின் ஆணையாகக் கேட்டுக் கொள்கிறேன்—நீங்கள் கட்சிக்குத் துரோகம் செய்வீர்களானால், காலாகாலத்திற்கும் உங்கள் உள்ளத்தில் அந்த மாசு இருக்கும்! உங்கள் வரலாற்றில் மறையாத களங்கம் ஏற்பட்டுவிடும்!**

**தி. மு. கழகம் இரத்தத்தால் வளர்ந்தது! அதன் இரு வண்ணக் கோடியிலுள்ள சிவப்பு வண்ணம் எண்ணற்ற தியாகிகள் சிந்திய இரத்தத்தால் ஆனது! கழகக் கோடிக் கம்பம், தியாகிகள் பலரின் எலும்பில் உருவாக்கப்பட்டதாகும்! கட்டப்பட்டிருக்கும் கயிறு பலரின் நரம்புகளாகும்!**

"**தி. மு. கழகம் எனும் தியாக மாளிகை, சாதாரணமான தல்ல மொழிப் போரில் தீக்குளித்துச் செத்த தியாகிகளால் உருவாக்கப்பட்டது!**

"அண்ணாவின்மீது அன்பும் பாசமும் கொண்டிருக்கிறோம் என்று சொன்னதெல்லாம் நாடகந் தானா?

'தாயை மறந்து -- தாரத்தை மறந்து -- பெற்ற ஒரே மகளையும் மறந்து -- தமிழுக்காகத் தீக்குளித்தானே சிங்கத் தமிழன் சின்னச்சாமி—கோடைக்கால வெயிலில் வெடிப்புற்ற நிலம் போல் அவனுடைய உடல் வெடிப்புற்றபோதும், கண்கள் தீயில் எரிந்தபோதும், கரிய கூந்தல் கருகியபோதும், முத்துப் பற்கள் மூண்ட தீயில் படீர் படீர் என வெடித்துச் சிதறிய போதும், 'அய்யோ, அம்மா' எனக் கூவாமல், கடைசிமூச்சை விடும்வரையில், 'இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!' என்று முழக்கமிட்டானே சின்னச்சாமி—அவன்பேரால் கேட்கிறேன்—அவன் வளர்த்த கட்சிக்குத் துரோகம் செய்யலாமா?

"சென்னையிலே சிவலிங்கம், அரங்கநாதன் ஆகியோர் தீக்குளித்துச் செத்தார்களே—கோ. சு. மணி விலைவாசிப் போராட்டத்திலே கலந்துகொண்டு உயிரோடு சிறைக்குச் சென்றவன் பிணமாகத் திருப்பி அனுப்பப்பட்டானே—மதுரைச் சிறையில் திருவில்லிபுத்தூரைச் சேர்ந்த பொற்செழியன் பிணமாக்கப்பட்டானே — அவர்கள் பெயரால் கேட்கிறேன் — பிரிந்து நிற்கும் தோழர்களே! நீங்கள் செய்வது நியாயமானதுதானா?

"வண்ணைப் பாண்டியன் யாருக்காகச் செத்தான்—கழகத்திற்காக அல்லவா!

'தூத்துக்குடித் தங்கம் கே. வி. கே. சாமி, தன்னைத் தியாகம் செய்துகொண்டது எதற்காக—கழகத்திற்காக அல்லவா!

"நெல்லிக்குப்பம் மஜீது என்ற இளைஞன், ஆலையிலே இருந்து திரும்பும்போது வெறியர்களால் கட்டாரியால் குத்தப்பட்டு குடல் சரிய செத்தானே, யாருக்காக—கழகத்திற்காக அல்லவா—எண்ணிப்பாருங்கள்!

"கழக நண்பர்களே! எங்களோடு தோளோடு தோள் நின்று பணியாற்றியவர்களே! அண்ணாவின் அணிவகுப்பில் நின்றவர்களே! உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன் — தனிப்பட்டவர்களைப் பற்றிய எண்ணம் வேண்டாம்! கழகத்தின் வெற்றிக்காகப் பாடுபடுங்கள்!

"1959-ல் மாநகராட்சியைக் கைப்பற்ற உதவிய சின்னம்—1967-ல் தமிழகத்தில் தி. மு. கழக ஆட்சி ஏற்படவும், அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்கவும் வழிவகுத்த சின்னம்—அந்தச் சின்னத்தின் வெற்றிக்காகச் சிந்திய இரத்தத்தை -- கொட்டிய உயிர்களை எண்ணிப் பாருங்கள்! 'அந்தத் தியாகம் வீண் போகாது; நாங்கள் துரோகிகளாகமாட்டோம்' என்பதை மெய்ப்பிக்கும்வண்ணம், கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும், கூட்டணி வேட்பாளர்களுக்கும் வெற்றி தேடித் தர -- வாக்குச் சேகரிக்க முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

**-- அமைச்சர் கருணாநிதி**

(தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்)

## கழகம் பெற்றுள்ள வலிமை!

சென்னை, அக். 24—

'சனநாயக ககாப்தத்தில் ஒரு கட்சியே ஆண்டுகொண்டிருக்கின்ற நிலை மாறி, 'பிற கட்சிகளுக்கும் ஆளும் தகுதி இருக்கிறது' என்பது மெய்ப்பிக்கப் பட வேண்டும்!

"20 ஆண்டுக்காலம் காங்கிரசுக் கட்சி மட்டுமே ஆண்டு வந்தது என்றால், அந்தக் கட்சியைவிட வலிமை வாய்ந்த --- வளர்ந்த கட்சி ஏற்படவில்லை என்றுதான் அர்த்தம்; இன்று, காங்கிரசைவிட வளர்ந்த நிலைக்கு --- வலிமை மிக்கதாக தி. மு. கழகம் மாறியிருக்கிறது!

"மைனர் மேஜராவதுபோல, அங்குலம் அங்குலமாக உழைத்துப் பொறுமையாக இருந்து வளர்ந்து முன்னேறிய கட்சி, தி. மு. கழகம்!

"ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளுக்கு ஆளும் திறமை இருக்கிறது என்ற நிலை ஏற்பட்ட நாடுதான் முன்னேற முடியும்!

"ஒரே கட்சி ஆள வேண்டுமென்பதற்காகவா பாடுபட்டுச் சுதந்தரம் பெற்றோம்? இருபது ஆண்டுக் காலம் காங்கிரசுக் கட்சி ஆட்சி நடைபெற்றது; கடந்த ஒன்றரை ஆண்டுகளாத்தான் தி. மு. கழகம் ஆளுகிறது; குறை இருந்தால் திருத்த வேண்டும்!

"**கட்சிக்காக உழைத்தவர்கள் — ஓட்டாண்டியானவர்கள் -- இரத்தம் சிந்தியவர்கள் ஆகியோர் கோட்டையை நோக்கி வந்தபோது அண்ணா அவர்கள், எல்லா இடங்களையும் காண அனுமதித்தார்; 'பார்த்தது போதும்; இப்போது நாங்கள் பணியாற்ற வேண்டும்' என்று அவர்களை நிறுத்திவைத்திருக்கிறார்! எவ்வளவு நல்ல பண்பாடு பாருங்கள்!"**

**---ம. பொ. சிவஞானம்**

(தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

## வாக்காளர்களிடை எம்.ஜி.ஆர்.

சென்னை, அக். 24—

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் இன்றும் தேர்தல பணியில் ஈடுபட்டு -- வாக்காளர்களை நேரில் சந்தித்து -- கழகத்திற்கும், தோழமைக் கட்சிகளுக்கும் ஆதரவு கோரினார்.

எம்.ஜி.ஆர். அவர்கள் சென்ற விடமெல்லாம் வாக்காளப் பெருமக்களும் பொதுமக்களும் மாலையணிவித்தும், குளிர் பானம் வழங்கியும், மகிழ்ச்சி பொங்க வரவேற்றனர்.

திறந்த மோட்டார் வானில் -- அந்தந்த வட்ட வேட்பாளருடன் நின்றபடி கரங் கூப்பியவாறு முக்கிய வீதிகளில் எம். ஜி ஆர். அவர்கள் சென்றார்.

தமக்கு அணிவிக்கப்பட்ட மாலைகளையெல்லாம் கூட்டத்தின்மீது வீசியெறிந்து தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

குழுமியிருந்தோர் 'உதயசூரியனுக்கே எங்கள் வாக்கு' என்று முழக்கமிட்டனர்.

### பொதுக்கூட்டங்களில் பங்கேற்பு

இன்று—சென்னை 115, 85, 78, 72 ஆகிய வட்டங்களில் நடைபெறும் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டங்களில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பங்கேற்கிறார்.

எம். ஜி. ஆர். அவர்களுடன் முரசொலி மாறன் எம்.பி. அவர்களும் வந்தார்.

மாவட்டச் செயலாளர் நீல நாராயணன், புலவர் நடேசன், மற்றும் அந்தந்தப் பகுதி -- வட்ட தி. மு. கழகச் செயலாளர்களும் உடனிருந்து, வாக்காளர்களை எம். ஜி. ஆர். அவர்கள் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை முன்னின்று கவனித்தனர்.

## இதுவரையில் 1,40,000 பேர் — பர்மாவிலிருந்து வந்துள்ள அகதிகள்

இரங்கூன், அக். 24—

1544 இந்திய அகதிகளை ஏற்றிக்கொண்டு இங்கிருந்து ஒரு கப்பல் நேற்று சென்னைக்குப் புறப்பட்டது; இப்போதைய குடியேற்றத் திட்டத்தில், இவர்கள்தான் கடைசி குழுவினராக இருக்கக் கூடுமெனக் கருதப்படுகிறது.

அகதிகள் பட்டியலில் இன்னும் சுமார் 3000 இந்தியர்கள் உள்ளனர்; இந்தியத் தூதரகம் இவர்கள் நிலையைப் பரிசீலனை செய்து வருகிறது.

திருப்பி அனுப்பப்படுவோரில் பெரும்பாலோர் சிறு வியாபாரத் தொழில் நடத்துவோராகவும் தொழிலாளிகளாகவும் உள்ளனர்.

1964-லிருந்து இதுவரையில், பர்மாவிலிருந்து 1,40,000 இந்தியர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

## கொஞ்சமும் யோசிக்க வேண்டாம்!

சென்னை, அக். 24—

"ஐந்தாண்டுக் காலம் ஆளுவதற்குத் தி. மு கழகத்துக்கு அனுமதி தந்தீர்கள்! அவர்கள் தொடர்ந்து ஆளுவதற்கு ஆதரவு தாருங்கள்! ஐந்தாண்டுகளுக்குள் எந்தவித விரும்பத்தகாத மாறுதலையும் செய்துவிடாதீர்கள்!

"மாநில அரசில் ஒரு கட்சியும் -- மாநகர ஆட்சியில் வேறு கட்சியுமாக இருந்தால், தி. மு. கழகத்தின் பல்வேறு திட்டங்கள் நடைபெறாமலிருந்தன!

"இப்போது தி. மு. கழகமே மாநில ஆட்சியில் இருக்கிறது; எல்லாத் திட்டங்களையும் நல்ல முறையில் ஒன்றுக்கொன்று அனுசரணையாகச் செய்து கொள்ள முடியும்; ஆகவே சிறிதும் யோசிக்காமல் தி. மு. கழகத்துக்கு வாக்களியுங்கள்!"

**--ம. பொ. சிவஞானம்**

(தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

## காதில் விழுந்தது!

"நாகர்கோவில் இடைத் தேர்தலைப் பற்றி எல்லோரும் என்ன கருதுகிறார்கள் என்று செய்தி வெளிவந்து விட்டது."

"எல்லோரும் என்றால்?"

"இந்திரா, நிஜலிங்கப்பா முதல் எதிர்க் கட்சியின் தலைவர்கள் வரை எல்லோருமே இந்த இடைத் தேர்தலைப் பற்றி ஒன்றிரண்டு சொல்லிவிட்டார்கள் என்கிறேன்."

"சரி; நீ சொல்ல வந்தது, வேறு எதையோ என்று நினைக்கிறேன்."

"ஆமாம்; இப்படி அனைவருமே நாகர்கோவிலைப் பற்றிப் பேசிவிட்ட பின்னரும், பேசாமல் இருப்பவர்கள் காமராசரும், சுப்பிரமணியமும்தான்!"

"பேசாமல் இருக்கலாம்; ஆனால், 'காரியத்தில்' இறங்கியிருக்கலாமல்லவா?"

"நாகர்கோவிலுக்குத் தமது ஆட்களை அனுப்பி, நிலைமையைத் தெரிந்துவரச் சொல்லியிருப்பதாகக் காமராசரைப் பற்றி ஒரு செய்தி வெளிவந்ததே -- அதனை வைத்துச் சொல்கிறாயா?"

"ஆமாம்."

"அது அப்படி ஒன்றும் சரியான தகவல் இல்லை என்றுதான் என்னால் யூகிக்க முடிகிறது."

"'நானும்தான் அவரைப் போல் -- அழகேசனைப்போல் தோற்றேன்; அவரைக் கவனித்துக் கொண்டதுபோல் என்னைக் கவனித்தீர்களா? எனக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவி கொடுத்தால் போகமாட்டேனா? அல்லது மத்திய அமைச்சரவையில் காமராசரை அமர்த்த முயற்சிப்பதைப்போல் எனக்காகவும் முயற்சித்தால் அதனை நான் 'வேண்டாம்' என்று மறுத்துவிடுவேனா?' என்று சுப்பிரமணியம் பொருமிக் கொண்டிருக்கிறாராமே?"

"இதுவும் தவறான தகவல் என்பதுதான் எனது யூகம்."

"அப்படியானால், 'நாகர்கோவில் இடைத் தேர்தல் மூலம் மத்தியில் அமைச்சராவதை காமராசரும் விரும்பவில்லை -- அதைப் பார்த்து சுப்பிரமணியமும் மனம் பேதலிக்கவில்லை' என்கிறாயா?"

"ஆமாம்."

"எப்படி?"

"சொல்கிறேன் கேள்; உண்மை நிலை என்னவாக இருக்குமென நான் இப்படித்தான் யூகிக்கிறேன்; முன்பு, கட்சி அளவில் அனைத்திந்தியத் தலைவர் பதவிக்குப் போனதன் விளைவுதான், இப்போது 'கட்சி'யும் போயிற்று -- 'ஆட்சி'யும் போயிற்று என்பதனை, யார் உணராவிட்டாலும் காமராசர் உணருகிறார்! இப்போது மீண்டும் டில்லிக்கு—அதுவும் அமைச்சராக—போனால், தமிழ்நாட்டில், கட்சியில் தமக்குள்ள செல்வாக்கு இறுதிக் கட்டத்துக்கு வந்துவிடுமே என்பதனை முன்கூட்டி நினைத்தும் பார்க்கத் தெரியாதவரல்லர் காமராசர். அதனால்தான், நாகர்கோவில் பற்றி இன்னும் அவர் வாய் திறக்கவில்லை!"

'ஓகோ! சரிதான்! இப்போதுதான் சுப்பிரமணியத்

(4-ம் பக்கம் பார்க்க)

# இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மீண்டும் போராட்டம்

## டில்லிக்கு பிராங்க் அந்தோணி எச்சரிக்கை

### சட்டத்தையே மீறும்வகையில் இந்தி வெறியர்களின் நடவடிக்கை

புதுடில்லி, அக். 22—

"இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து மீண்டும் ஒரு போராட்டத்தைத் தொடங்கவேண்டிய கட்டம் நெருங்கிவருகிறது.

"இந்தி ஏகாதிபத்திய அலை உயர்ந்து இந்தி பேசாத பகுதி மக்கள் அனைவரையும் விழுங்கக் கூடிய போராட்டத்தை எதிர்த்து நாம் போராட வேண்டியிருக்கும்.

"இந்திக்கு நாடு முழுவதிலும் உள்ள எதிர்ப்பை மத்திய அரசு உணர்ந்துகொள்ளவேண்டும்; இந்தி பேசாத பகுதி மக்கள் மீது இந்தியைத் திணிக்கும் முயற்சியைக் கைவிடவேண்டும்.

"இந்தித் திணிப்புக் கொள்கையை மத்திய அரசு மாற்றிக் கொள்ளாவிட்டால் மீண்டும் ஓர் போராட்டம் நடைபெறு மென்பதில் ஐயமில்லை"

என்று ஆங்கிலோ—இந்தியர் தலைவர் பிராங்க் அந்தோணி சுட்டிக்காட்டி எச்சரித்திருக்கிறார்.

உத்தரப் பிரதேசத்தில் 1971-ம் ஆண்டிலிருந்து பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம். பட்டப் படிப்பில் இந்தி மட்டுமே பாடமொழியாக இருக்கும் என இலட்சுமனபுரி பல்கலைக் கழகம் அறிவித்திருப்பதைச் சுட்டிக்காட்டி அவர் மேலும் கூறியிருப்பதாவது:

"குசராத் பல்கலைக் கழகத்தின் வழக்கு ஒன்றில்—1962-ல்—இந்தியத் தலைமை நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை, இலட்சுமணபுரி பல்கலைக் கழகம் அப்பட்டமாக மீறுகிறது; 'ஆங்கிலத்தைச் சட்டவிரோதமாக்கி, 'இந்தி அல்லது குசராத்திதான் பாடமொழி' என்று அறிவிக்க எந்த மாநில அரசுக்கோ, பல்கலைக் கழகத்திற்கோ அதிகாரம் கிடையாது' எனத் தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

உ. பி. பல்கலைக் கழகத்தின் இம்முடிவு, தேசிய ஒருமைப்பாடு பற்றிய சம்பூர்ணனந்தா குழு, கோத்தாரி குழு ஆகியவைகளின் சிபாரிசுகளை மீறுவதாக இருக்கிறது.

"இந்தி வெறியர்களின் இந்தத் திமிரான போக்கு, அப்பட்டமாகச் சட்டத்தை மீறுகிறது; இந்தியைத் தவிர மற்றவைகளைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களுக்கு இது பலத்த அடியாகும்.

"உத்தரப் பிரதேசத்தில் ஆங்கிலத்தைப் பாட மொழியாகக் கொண்ட பள்ளிகளில் சுமார் 70,000 பேர் கல்வி கற்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2,000 மாணவர்கள் இவற்றினின்று தேர்ச்சி பெற்றுக் கல்லூரிகளுக்குச் செல்கிறார்கள். இந்த இந்தி வெறியினால், உத்தரப் பிரதேசத்தில் வசிக்கும் சிறுபான்மை மொழியினர் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

"இதனால், வேறு மாநிலங்களிலிருந்து இங்கேவந்து குடியேறியுள்ள பெற்றோர்களால் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வியளிக்க முடியாமல் போய்விடும்.

"எல்லாவற்றையும்விட, இந்த உத்தரவு, நேருவின் இருமொழித் திட்டத்தை வேண்டுமென்றே இழிவுபடுத்துவதாகும்."

# வானொலியில் மேலும் இந்தி திணிப்பு

## செய்தி அறிக்கை இந்தியிலாம்!

புதுடில்லி, அக். 23—

அனைத்திந்திய வானொலி ஒலிபரப்பும் இரண்டு முக்கிய இந்திச் செய்தி அறிக்கைகளை இந்த ஆண்டு டிசம்பர் 8-ம் நாள் முதல் எல்லா வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யுமாம்.

அன்று முதல் காலையிலும், மாலையிலும் ஆங்கிலச் செய்தி அறிக்கைகளுக்கு முன்னதாக இந்திச் செய்தி அறிக்கைகள் ஒலிபரப்பாகுமாம்.

இந்தத் தகவலை மத்திய தகவல்-- ஒலிபரப்புத் துறை அமைச்சர் கே. கே. ஷா தகவல் ஒலிபரப்புப் பிரிவின் இந்தி பற்றிய குழுவின் கூட்டத்தில் தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்தி அறிக்கைகள் நன்றாகக் கேட்பதற்காக இந்த நடவடிக்கை செய்யப்படுகிறதாம்.

"வட இந்தியாவில் உள்ள வானொலி நிலையங்கள், தமிழ்நாடு — ஆந்திரம் — கருநாடகம்— கேரளம் ஆகிய மாநில மக்களின் வாழ்க்கை, பண்பாடு, இலக்கியம் சம்பந்தமான சில நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும்" என்றும் அமைச்சர் கூறினார்.

# நீதிமன்றத்தில் இந்தி

## அமைச்சர் செ. மாதவன் எச்சரிக்கை

சென்னை, அக். 24—

"பொதுவாக நீதி -- நிர்வாகத் துறை மெத்தனமாகவும், ஏராளமாகப் பணம் செலவழிக்கப்படுகின்ற தன்மையிலும் இயங்குவதாகப் பொதுமக்களிடையே ஒரு கருத்து நிலவிவருகிறது; இந்தக் குறைபாடு நீக்கப்படவேண்டும்"

என்று மனித உரிமைகள் நாளையொட்டி நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் தமிழகச் சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

"நாட்டின் ஒற்றுமையையும் நீதியையும் குலைப்பதாக மொழி இருக்கக்கூடாது.

"இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் இந்தி மொழியைப் புகுத்த முடிவு செய்திருப்பது நாட்டின் ஒற்றுமையை நிச்சயமாகப் பிளவுபடுத்திவிடும்."

# 'புரட்சி மூளும்'

## விவியன் போஸ் கருத்து

சென்னை, அக். 24—

சென்னையில் நடந்த மனித உரிமைகள் நாள் கூட்டத்தில் அனைத்துநாட்டுச் சட்ட நிபுணர்கள் குழுவின் சிறப்புத் தலைவர் திரு. விவியன் போஸ் கலந்துகொண்டு கருத்துரையாற்றுகையில், 'நாட்டில் புரட்சி ஏற்படுவதற்கான நிலைமை உருவாகியுள்ளது' என்றும், 'சமாதான முறையில் இந்தப் புரட்சி ஏற்படச் செய்யவேண்டும்' என்றும் கூறினார்.

"நாட்டில் எல்லாத் துறைகளிலும் ஊழல்கள் பெருகிவிட்டன" என்று வேதனையோடு குறிப்பிட்டார்.

"பொருளாதாரத் துறையில் இந்தியா 'திவாலாகி' விட்டது" என்றும் அவர் கூறினார்.

"இந்தியர்கள் பின்னோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றனர்; வெற்றி முழக்கங்களை நம்பியிருப்பது --- இரட்டை அளவுகோல்களை பயன்படுத்துவது போன்றவை நம்மிடமுள்ள சில குறைபாடுகளாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஆங்கிலமே நீடிக்க வேண்டும்

## தலைமை நீதிபதி கருத்து

சென்னை, அக். 22—

"இந்தியத் தலைமை நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றங்களிலும் ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்கவேண்டும்.

"நீதிமன்றங்களின் ஆவணங்கள் -- விவாதங்கள், உயர் நீதிமன்றங்கள், தலைமை நீதிமன்றம் ஆகியவைகளின் தீர்ப்புக்கள் ஆகிய அனைத்திலும் காலவரையறையின்றி ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டும்"

என்று இந்தியத் தலைமை நீதிபதி இதயதுல்லா, சென்னை வழக்கறிஞர்கள் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

# அரிசிக் கடத்தலைத் தவிர்க்க நடவடிக்கை

## நெல்லை கலெக்டர் தகவல்

நெல்லை, அக். 24—

நெல்லை மாவட்டத்தில் கார் அறுவடை துரிதமாக நடைபெறுவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் டி. வி. அந்தோணி நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

"நெல்லை—கோவை எல்லைப் பகுதிகளில் உள்ள எல்லா கண்காணிப்பு நிலைய (செக் போஸ்டு) அதிகாரிகளையும் விழிப்போடு இருந்து கேரள மாநிலத்திற்கு அரிசி கள்ளத்தனமாகக் கொண்டு போவதை தடுக்கவேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

"இம்மாவட்டத்தில் இந்த ஆண்டு 35,000 டன் கொள்முதல் இலக்காக வைக்கப்பட்டிருக்கிறது; இதுவரை சுமார் 32,000 டன் அளவுள்ள நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது; திட்ட இலக்கைவிட அதிகமாகக் கொள்முதல் செய்யமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்று அவர் தெரிவித்தார்.

# மாமல்லபுரத்தை மேம்படுத்தத் திட்டம்

## மாவட்டக் கலெக்டர் தகவல்

மதுராந்தகம், அக். 23—

"ரூ. 1 கோடி செலவில் மாமல்லபுரத்தை மேம்படுத்தப் பெரிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது"

என்று செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் இலட்சுமிகாந்தன் பாரதி கூறினார்.

இத்திட்டத்துக்காக ரூ. 8 இலட்சம் செலவில் 260 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படும்.

விடுமுறை நாட்களில் வந்து தங்குவதற்கான எல்லா வசதிகளும் உள்ள பல விடுதிகள் கட்டப்படும்; இதற்கு ரூ. 5 இலட்சம் செலவாகுமென மதிக்கப்பட்டுள்ளது.

ரூ. 12 இலட்சம் செலவில் விருந்தினர் விடுதி கட்டப்படும்.

ஊரில் அதிகப்படி மின்சார வசதிகள் செய்வதற்காக ரூ. 2 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

குளிக்கும் கட்டங்கள், கொட்டகைகள் அமைக்க ரூ 2 இலட்சமும், படகுகளுக்காக ரூ. 2 இலட்சமும் செலவிடப்படும்.

ரூ. 2 இலட்சம் செலவில் குழந்தைகள் பூங்கா அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடற்கரை அபிவிருத்திக்காக ரூ. 1 இலட்சம் செலவாகும்.

மற்றும் தகவல் நிலையம், திறந்த வெளி தியேட்டர் முதலியவைகள் ஏற்படுத்தப்படும்.

உல்லாசப் பயணிகளுக்காக ஒரு சத்திரம் கட்டப்படும்; மற்றும் பல வசதிகள் செய்யப்படும்.

"இத்திட்டம் இறுதி ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பப்படும்" என்று கலெக்டர் கூறினார்.

# 'சனநாயகப் பாதையிலிருந்து இந்தியா விலகிப் போகிறது'

## 'ஆட்சிக் கவிழ்ப்புக் கட்சிகளால் மனித உரிமைக்குப் பெரும் ஆபத்து'

### இந்தியத் தலைமை நீதிமன்ற நீதிபதி இதயதுல்லா கருத்துரை

சென்னை, அக். 23—

"இன்றைய நிலைமையில் சனநாயகம் என்பது, வெறும் பெரும்பான்மை பலம் கொண்ட ஆட்சியல்ல; ஒரு பொதுக் கருத்தை உருவாக்கி அதனைச் செயல்படுத்துவதேயாகும்; ஆனால் இன்று இந்தியாவில் அந்தப் பாதையிலிருந்து நாம் விலகிப் போய்க்கொண்டிருக்கிறோம்"

என்று, இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான திரு. எம். இதயதுல்லா தெரிவித்தார்.

சென்னைப் பல்கலைக் கழக மண்டபத்தில் மனித உரிமை நாளையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"இந்தியாவில் சில சட்டமன்றங்களில் கோஷ்டிப் பூசல்கள் மலிந்திருப்பதால், சட்டத்தின் ஆட்சி பாதிக்கப்பட்டு வருகிறது.

"இங்கு பல சிறு அரசியல் கட்சிகள் இருக்கின்றன; சட்டமன்றங்களில் இவை தனிக் கட்சிகளாக இயங்குகின்றன; அவை கட்டுக் கொள்கைகளோ, கோட்பாடுகளோ எதுவுமில்லை; சொந்தக் காரணங்களுக்காக ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சியைக் கவிழ்ப்பதுதான் அவைகளின் நோக்கமாக இருக்கிறது; இது மிகவும் ஆபத்தான போக்காகும்.

"அதிருப்தியாளர்கள் சிலர் சேர்ந்து எவ்விதக் கொள்கையும் இல்லாமல் ஒரு கட்சியை அமைப்பதென்பது மனித உரிமைகளுக்குப் பெரிய ஆபத்தாகும்.

"எப்போதும் நெருக்கடி உணர்ச்சியுடனேயே செயல்படும் அரசுகள் மனித உரிமைகளைச் செயல்படுத்த முடியாது."

# அறிஞர் அண்ணாவின் சீர்திருத்தப் பணி

## கருநாடகக் காந்தியவாதியின் புகழ்மாலை

பெங்களூர், அக். 23—

**"திரு. சி. என். அண்ணாதுரை அவர்களாலும், அவரது தோழர்களாலும் துவக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்"**

என்று பெங்களூரில் அண்ணா அவர்களைப் பற்றிய சிறப்பு நூல் ஒன்றை வெளியிட்டுப் பேசுகையில், பிரபல காந்திவாதியான 'கோரா' இராமச்சந்திர ராவ் கூறினார்.

அவர் மேலும் கேட்டுக்கொண்டதாவது:—

**"சாதி -- வகுப்புகளின் பெயரால் எழுப்பப்பட்டுள்ள செயற்கை அரண்களைத் தகர்த்தெறிய சுயமரியாதை இயக்கத்தினால்தான் முடியும்!**

**"அண்ணாவைப் பின்பற்றுபவர்கள், சுயமரியாதை இயக்கத்தை நாடு முழுவதிலும் பரப்பவேண்டும்."**

அண்ணாவைப்பற்றிக் குறிப்பிடுகையில் அவர், 'அண்ணா ஒரு தலைசிறந்த சமூகச் சீர்திருத்தவாதி; மக்களின் நண்பர்; புரட்சிக்காரர்' என்று கூறினார்.

# மதுரைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

## அமைச்சர் நெடுஞ்செழியன் உரையாற்றுவார்

சென்னை, அக். 24—

மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா, இவ்வாண்டு டிசம்பர் 13-ஆம் நாள் மதுரையில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு பல்கலைக் கழக வேந்தர் சர்தார் உஜ்ஜல் சிங் தலைமை தாங்குவார்.

தமிழகக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்துவார்.

# ஐந்தரை இலட்சம் ஏக்கரில் தீவிரச் சாகுபடி

## வேர்க்கடலை உற்பத்தியைப் பெருக்கத் திட்டம்

சென்னை, அக். 23—

தமிழகத்தில் மொத்தம் சுமார் 50-இலட்சம் ஏக்கர்களில் வாணிபப் பயிர்கள் இடம்பெறுகின்றன. இதில் சுமார் $14\frac{1}{2}$-இலட்சம் ஏக்கர்களுக்குப் பாசன வசதி உண்டு; மீதமுள்ளவை மழையை நம்பி இருப்பவை.

மத்திய அரசு உதவியுடன் வேர்க்கடலை பயிரிடும் திட்டம் ஒன்று இப்போது செங்கற்பட்டு, வட ஆற்காடு, சேலம், தர்மபுரி, தென்னாற்காடு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது; இத்திட்டம், வேர்க்கடலை ஏற்றுமதியைக் கருத்தில் கொண்டது.

படிப்படியாகச் சுமார் $5\frac{1}{2}$-இலட்சம் ஏக்கர்களைத் தீவிரச் சாகுபடியின்கீழ் கொண்டுவரவேண்டும் என்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கம்; சுமார் 2-இலட்சம் டன் கூடுதலாகக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது குறிக்கோள்.

வேர்க்கடலைப் பருப்பாகவோ அல்லது எண்ணெயாகவோ ஏற்றுமதி செய்வதற்கு இந்த உற்பத்திப் பயன்படுத்தப்படும்.

# கேரள அமைச்சரவை

திருவனந்தபுரம், அக். 24—

கேரள மாநில உணவுத் துறை அமைச்சராக இதுவரை பணியாற்றிவந்த திருமதி கௌரி தாமசிடமிருந்து அந்தத் துறை பிரிக்கப்பட்டு போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

திருமதி கௌரி தாமஸ், வருவாய்த் துறை அமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றுவார்.

# குழந்தைகள் காப்பகத் திறப்பு விழா

தமிழக அரசு அரிசன நல நிதியிலிருந்து, அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், தவுட்டுப்பாளையம் அரிசன காலனிக்கு ஒரு வானொலிப் பெட்டி பரிசாகக் கொடுத்ததையொட்டி துவக்க விழாவும், 3 வயது முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கல்வியறிவு வளரக் குழந்தைகள் காப்பகத் துவக்க விழாவும் தவுட்டுப்பாளையம் அரிசன காலனியில், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் தலைவர் கே. கே. சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது.

கோபிசெட்டிபாளையம் கோட்டாட்சித் தலைவர் கே. மலைச்சாமி

(3-ம் பக்கம் பார்க்க)

# கழக வேட்பாளர்கள்



வி. முனுசாமி (முன்னாள் மேயர்)
(12-வது வட்டம்)



பி. ஏ. என். இராசரத்தினம்
(3-வது வட்டம்)




என். எஸ். தேவராசன்
(முன்னாள் துணை மேயர்)
(62-வது வட்டம்)



மைனர்மோசஸ்(முன்னாள்மேயர்)
(58-வது வட்டம்)



மு. பெருமாள்
(8-வது வட்டம்)



:சு. பாலன்
(49-வது வட்டம்)



சி சிட்டிபாபு (முன்னாள் மேயர்)
(73-வது வட்டம்)



சோ. கி. மூர்த்தி
(113-வது வட்டம்)



கோ. செங்குட்டுவன்
(17-வது வட்டம்)



என். வி. என். சோமு
(28-வது வட்டம்)



இரா. காசிச்சாமி
(94-வது வட்டம்)



கே. கோவிந்தசாமி
(16-வது வட்டம்)

# $1\frac{1}{2}$ விநாடிக்கு ஒரு குழந்தை பிறப்பு

## இந்தியாவின் மக்கள் தொகை பெருகும் விதம்

### இருபதாண்டுக்குப் பின் நிலைமை என்ன?

இந்தியாவின் மக்கள் தொகை, இவ்வாண்டு செப்டம்பர் முதல் நாளன்று 3,000-க்கும் அதிகமான நகரங்களிலும், 5,60,000 கிராமங்களிலும் மொத்தம் 52 கோடியே 60 இலட்சத்துக்கும் கூடுதலாக இருந்ததாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் நிலப்பரப்பு உலகத்தின் நிலப்பரப்பில் 2.4 சதவிகிதமாகவே இருந்தபோதிலும்கூட, இந்தியாவின் மக்கள் தொகையானது உலகத்தின் மக்கள் தொகையில் 14 சதவிகிதமாக உள்ளது.

மக்கள் தொகை ஆண்டொன்றுக்கு 2.5 சதவிகித வீதம் அதிகரித்துக்கொண்டு வருகிறது; ஒவ்வோர் ஒன்றரை விநாடிக்கும் ஒரு குழந்தை வீதம் பிறந்துகொண்டிருக்கிறது; ஓராண்டில் மொத்தம் இரண்டு கோடியே 10 இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன; மக்கள் தொகையில் ஆண்டுதோறும் ஒரு கோடியே 30 இலட்சம் கூடுதலாகிறது; மக்கள் தொகை இந்த வேகத்தில் அதிகரித்துக்கொண்டு போனால், இன்னும் 26 ஆண்டுகளில் 100 கோடி அளவை எட்டிவிடும்.

சென்ற 20 ஆண்டுகளில் நாடு மாபெரும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது; ஆனால், பொருளாதார வளர்ச்சிமூலம் கிடைத்துள்ள பலன்கள், மக்கள் தொகைப் பெருக்கத்தினால் சரிக்கட்டப்பட்டுவிட்டன.

எடுத்துக்காட்டாக நமக்குக் கிடைக்கும் நபர்விகித உணவு அளவு 12.8 அவுன்சிலிருந்து கொஞ்சம் அதிகரித்து 13.4 அவுன்சாகத்தான் ஆகியிருக்கிறது.

பிறப்பு விகிதத்தை, அடுத்த பத்து ஆண்டுகளில் அல்லது அதற்கு உள்ளாக ஆயிரத்துக்கு 41 என்று இப்போது இருக்கும் அளவிலிருந்து 22 என்ற அளவுக்குக் குறைப்பதே அரசு மேற்கொண்டுள்ள குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும்; இத்திட்டம் முற்றிலும் மக்களின் விருப்ப அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டுவருகிறது.

நாடெங்கிலும் மொத்தம் 1,879 நகர்ப்புறக் குடும்ப நலத் திட்ட நிலையங்களும், 24,366 கிராமப்புற நிலையங்களும் துணை நிலையங்களும் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை தவிர, மொத்தம் 9,129 மருத்துவ நிலையங்கள் குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஆலோசனை கூறுவதோடு கருத்தடைச் சாதனங்களையும் வழங்குகின்றன.

கருத் தடைக்காக உட்கொள்ளும் மாத்திரைகள் பற்றிய 313 முன்னோடித் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது; அவற்றில் 151 செயல்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு செப்டம்பர் 10-ம் நாள் வரையில், மொத்தம் 46,13,760 பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது; மொத்தம் 25,23,396 பெண்களுக்கு 'லூப்' பொருத்தப்பட்டது.

'லூப்' பொருத்துவது -- கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்வது -- காண்டோம்கள், டயாப்ரம்கள், நுரை மாத்திரைகள், ஜெல்லி இவை போன்ற பலவகையான கருத்தடை முறைகள் பயன்பாட்டில் இருந்துவருகின்றன. இன்னும் சிறந்த நுட்பமுறைகளைக் கண்டு பிடிப்பதற்காக ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுவருகின்றன.

குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான ஆலோசனைகளையும் பணிகளையும் அரசு இலவசமாக அளித்துவருகிறது.

'காண்டோம்'களைப் பயன்படுத்துகிறவர்களுக்கு அரசு மருத்துவமனைகளிலும், கிளினிக்குகளிலும் அவை இலவசமாக வழங்கப்பட்டுவருகின்றன.

கடைகளில், மூன்று 'காண்டோம்'கள் அடங்கிய பாக்கெட் ஒன்று 15-காசுவீதம் விற்கப்பட்டுவருகிறது. கிராமங்களில், 'காண்டோம்' விற்பனையாளர்கள், மூன்று 'காண்டோம்'களை 5-காசுக்கு விற்பார்கள்.

குழந்தை பிறக்கும் வயதிலுள்ள மொத்தம் 10-கோடியே 50 இலட்சம் தம்பதிகளுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அம்சங்களை எடுத்துரைத்து, அவர்களைத் தூண்டுவதற்காகப் பொதுமக்கள் பிரசார முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

வானொலி, டெலிவிஷன், செய்திப் பத்திரிகைகள், வெளியீடுகள் முதலிய எல்லா வகையான சாதனங்களும் இதற்குப் பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

குடும்பக் கட்டுப்பாடு பற்றிய கருத்தைப் பொதுமக்களிடையே உருவாக்கும் மொத்தம் 25-இலட்சம் தலைவர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப் பிரசார வெளியீடுகளைத் தபால் மூலம் நேரடியாக அனுப்பி வைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப் பணிகளில், பயிற்சிபெற்ற ஆண் -- பெண் ஊழியர்கள் மொத்தம் சுமார் 1,25,000-பேர் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

[2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

வானொலியைத் துவக்கிவைத்தார்.

அந்தியூர் ஊராட்சி ஒன்யறி ஆணையர் டி. கே. வெங்கடாசலம், குழந்தைகள் காப்பகத்தை துவக்கி வைத்தார்.

கோட்டாட்சித் தலைவர் தமது சொற்பொழிவில் வானொலியின் மூலம் நற்பயன் அடையவேண்டுமென்றும், குழந்தைகள் காப்பகம் நன்கு இயங்க மாதம்தோறும் ஊராட்சி ஒன்றியத் தலைவர் தன் சொந்தப் பொறுப்பிலிருந்து குழந்தைகள் காப்பக ஆசிரியைக்கு ரூ. 20 கௌரவத் தொகை கொடுப்பது மிகவும் பாராட்டத்தக்கது என்று கூறினார்.



கே. லோகநாதன்
(44-வது வட்டம்)

# 'தமிழகத்தில் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கிறது'

சென்னை, அக். 24—
"தமிழகத்தில் தொழில் வளர்ச்சி சிறப்பான முறையில் இருக்கிறது; வேலை வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன"

என்று, தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் கூறினார்.

குடிசைவாழ் மக்களுக்கான தீப்பிடிக்காத வீடுகளைத் திறந்து வைத்து அவர் பேசுகையில், தொழிலாளர்கட்குக் குடியிருப்பு வசதி செய்யப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அவர் மேலும் கூறியதாவது:—

"ஐந்து இலட்சம் பேர் சென்னையில் சேரி வாழும் அவலநிலையை அகற்றி, அவர்களுக்குச் சுகாதார முறையில் குடியிருப்பு வசதிகளை அளிக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பெரும் பணம் செலவு செய்தால் மட்டும் போதாது; மனிதாபிமானத்துடன் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசும், சமூக ஊழியர்களும், உள்ளத் தூய்மையுடன் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

"நமது உடன் பிறந்த மக்கள் குறைந்தபட்ச குடியிருப்பு வசதி கூட இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கையில் மாளிகை போன்ற வீடுகளில் வசிப்பதற்கு நமக்கு உரிமை கிடையாது

"சுகாதாரத்தின் இன்றியமையாமையை உணர்ந்து சேரி வாழ் மக்கள் அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டும்.

"மக்கள் தங்களுக்குத் தாங்களே உதவி புரிந்து கொண்டாலன்றி எந்த அரசின் திட்டமும் வெற்றி பெறாது."

# ஒற்றுமையைக் குலைப்பவர் காமராசர்!

## அனைவரையும் ஓரணியில் இணைப்பவர் அண்ணா

சென்னை, அக். 24—

"காமராசருக்கு, இராஜாஜிமீது வெறுப்பு ஏற்பட்டால் 'பிராமணத் துவேஷம்' செய்வார்!

"முஸ்லீம்களின்மீது கோபம் வரும்போது, அவர்களைப்பற்றி எதிர்த்துப் பிரச்சாரம் செய்வார்!

"இப்படி ஒற்றுமையைக் குலைத்துக்கொண்டிருப்பதே காமராசரின் வேலையாக இருந்து வருகிறது!

"இப்போது அவர்களுக்குள்ளாகவே ஒற்றுமைக் குலைவு ஏற்பட்டு, 'சுப்பிரமணியம் காங்கிரசு' என்றும், 'காமராசர் காங்கிரசு' என்றும் தமிழ்நாட்டில், கோஷ்டிகள் ஏற்பட்டு விட்டன!

"காந்தியாரின் தத்துவத்தை அறிந்தவன் என்ற முறையில் சொல்லுகிறேன் — அண்ணாவின் தலைமைதான் பிரிந்திருந்தவர்களையெல்லாம் ஒன்றுசேர்த்திருக்கிறது! இராஜாஜியையும், காயிதே மில்லத்தையும், என்னையும், இடது — வலது கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரே அணியாக மாற்றிய பெருமை அறிஞர் அண்ணா அவர்களுக்கே உண்டு!"

**--ம. பொ. சிவஞானம்**

(58-வது வட்டத்தில்)

# வெற்றி காண்போம்!

[புலவர் பொன்னிவளவன்]

பூங்காவில் குயில்வேண்டும்; எதற்குக் கோட்டான்?
பொன்னிநதி நீரில்மீன்; புழுஎ தற்கு?
பாங்கான சென்னைநக ராட்சி தன்னில்
பார்புகழும் நாம்! எதற்கு மாட்டுக் கட்சி?
மாங்காயின் மேற்புறத்தில் வடியும் பாலால்
வாய்மட்டும் தான்வேகும்! தேர்தல் தன்னில்
காங்கிரசார் வென்றார்க ளென்றால் நாட்டில்
கற்றவர்கள் மற்றவர்கள் நெஞ்சம் வேகும்!

வெல்வாரா? அடிபட்டுத் தரையில் செத்து
விழுந்திட்ட கிழப்பிணமா எழுந்து நிற்கும்?
கல்வாரிச் சிலுவையிலே மாண்ட ஏசு
கண்விழித்தார்; உயிர்த்தெழுந்தார் என்பர்; மக்கள்!
கல்வாரி வீசும்வகைத் திட்டிப் பேசும்
காங்கிரசார் நிச்சயமாய்ப் பிழைக்க மாட்டார்!
சொல்மாரி பொழிகின்ற கழகத் தோழா!
சுறுசுறுப்பாய் இருப்பவனே! விரைந்து வாநீ!

இடிக்கின்ற கார்மேகம் இடிநி றுத்தி
இனிக்கின்ற உன்பேச்சைக் கேட்கும்! நீயோ
அடிக்கின்ற புயற்காற்று மாற்று ருக்கு!
அசைந்துவரும் தென்றல்நீ மக்க ளுக்கு!
துடிக்கின்ற ஏழைகண் வடிக்கும் கண்ணீர்
துடைக்கின்ற கைஉன்கை! உரித்தெ டுத்து
உடைக்கின்ற தேங்காயின் உட்பு றம்போல்
உன்உள்ளம் எப்போதும் வெள்ளை உள்ளம்!

பூவுக்குள் இருக்கும்தேன் நினைக்கும் வண்டு!
பொன்நினைக்கும் பலர்நெஞ்சம்! நீயோ வீரச்
சாவுக்கு மனம்வைத்துத் தொண்டு செய்து
சரித்திரத்தில் இடம்பிடிக்க முயலும் வீரன்!
மாவுக்குத் தகுந்தபணி யாரம்! மக்கள்
மதிப்புக்குத் தகுந்தபடி வெற்றி! உன்றன்
நாவுக்கும் செயலுக்கும் நல்ல நட்பு!
நாட்டுக்கும் அதுதெரியும்! எழுந்து வாநீ!

தோசையிலே விழும்பொத்தல் இயற்கைப் பொத்தல்!
தோல்வியெனும் வார்த்தைவெறும் வார்த்தை அல்ல;
ஆசையிலே விழும்பொத்தல்! அந்தப் பொத்தல்
அறியாத வாழ்க்கைநம் வீர வாழ்க்கை!
காசைஅள்ளி இறைப்பார்கள் மாற்றார்! நீயோ
கருத்தைஅள்ளி இறைத்திடுவாய் மக்கள் முன்னால்!
மாசைஅள்ளி அணைப்பார்கள் மாற்றார்! வெற்றி
மாலைகளை நீஅள்ளி அணைக்க வேண்டும்!

வாடாத பூமுகத்தின் சொந்தக் காரர் —
வாழ்கின்ற வள்ளுவனார் — நமது காந்தி—
தேடாது கிடைத்ததமிழ்ச் செல்வம் -- இந்தத்
தென்னாட்டுப் பேரறிஞர் அண்ணா — இந்த
நாடாளும் முதலமைச்சர் கழகம் சென்னை
நகராள உனைஇன்று நம்பு கின்றார்!
பாடாமல் இருப்போமா வெற்றிப் பாட்டு?
பறந்தோடி வாதோழா! வெற்றி காண்போம்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் மவுனத்துக்கும் காரணம் புரிகிறது! 'எப்படியாவது மனிதர் இங்கிருந்து போனால் சரி' என்ற அளவில் சுப்பிரமணியம், மத்திய அமைச்சரவையில் காமராசர் அமைச்சராவதை விரும்பினாலும் விரும்புவாரே தவிர, 'பெருந் தலைவராக' அவர் இங்கேயே இருந்து விடக்கூடாதே என்பதில் தான் பெரும் நாட்டம் செலுத்துவார்!"

"ஆமாம்; நாகர்கோவிலில் காமராசர் -- காங்கிரசுத் தலைமையின் கணிப்புப்படி -- வெற்றிபெற்றாலும், சுப்பிரமணியம் திருப்தியடைவார்—'சரி; தலைவலி விட்டது' என்று!"

"இன்னும் ஒரு முறையாகத் தோற்றாலும் அதைவிட மகிழ்ச்சியடைவார்—'தலைவிதி கடைசியாக எழுதப்பட்டுவிட்டது' என்று; அப்படித்தானே!"

"சரியாகச் சொன்னாய்!"

—எஸ். ஆர்.

**கலைக் குழு முகவரி:**

இளம்பரிதி கலைக் குழுவினரின் 'காந்திக்குப் பின் அண்ணா' என்ற கலை நிகழ்ச்சி நடத்தவிரும்புவோர் தொடர்பு கொள்க:—

கோ. மா. இளஞ்சோழன்,
14/47, தெப்பக்குளம் வீதி,
கோவை-1.


# கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை

மூங்கில்துரைப்பட்டு

## டெண்டர் நோட்டீஸ்

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 1968—69 பருவ அரைப்புக்குக் கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொண்டு செய்ய 31—10—68 மாலை 5-30 மணிவரை, அந்தந்த வேலைகளில் மிக்க அனுபவமுள்ளவர்களிடமிருந்து டெண்டர்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு வேலைக்கும் குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகையை டெண்டருடன் செலுத்த வேண்டும்.

| வ.எண் | வேலை விவரம் | டேவணித் தொகை |
|---|---|---|
| 1. | லாரி, மாட்டு வண்டிகளிலிருந்து கரும்பை நேரடியாகக் கேன் கேரியரில் போடுவதற்கும், தரையில் இறக்கிப் போட்ட கரும்பை மீண்டும் கேன் கேரியரில் எடுத்துப் போடுவதற்கும் தனித்தனியே ரேட் கொடுத்தல் வேண்டும். | ரூ. 500 |
| 2 | சர்க்கரை மூட்டைகளைத் தைத்து விலாசமிட்டு, ஆலையிலிருந்து சர்க்கரைக் கிடங்கிற்குக் கொண்டுசென்று 20 மூட்டை உயரம் வரை அடுக்குவதற்கு, 100 மூட்டைகளுக்கு ரேட் கொடுத்தல் வேண்டும். | 500 |
| 3. | சர்க்கரைக் கிடங்கிலிருந்து சர்க்கரை மூட்டைகளை இறக்கி அவைகளை லாரிகளில் ஏற்றுவதற்கு 100 மூட்டைகளுக்கு ரேட் கொடுத்தல் வேண்டும். | 250 |
| 4. | பில்டர் ஸ்டேஷனில் சேரும் பில்டர் மண்ணை உடனுக்குடன் அப்புறப்படுத்தும் வேலை, 1 டன் மண் அப்புறப்படுத்துதலுக்கு ரேட் கொடுத்தல் வேண்டும். | 250 |

மற்ற விவரங்களுக்குப் பொது நிர்வாகியை அணுகி அறிந்து கொள்ளவும்.

எம். சீனிவாசன், பி.ஏ.,
பொது நிர்வாகி,
கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,
மூங்கில்துரைப்பட்டு அஞ்சல், தெ. ஆ. மாவட்டம்.


# தியாகத்தை மதிக்கும் மாண்புடையது தி. மு. க.!

"இன்று நாம் விழாக் கொண்டாடும் சங்கரலிங்கனார், காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த தியாகி! அப்பேர்ப்பட்டவர், 72 நாட்கள் உண்ணாநோன்பு இருந்தார்; அண்ணாவும், மற்ற எதிர்க் கட்சித் தலைவர்களும் அவரைச் சந்தித்து, உண்ணாநோன்பைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டார்கள்; அவர்களால் சங்கரலிங்கனாரின் கோரிக்கையை நிறைவேற்றிட அப்போது முடியாது --- அப்போது அவர்கள் அதிகாரத்தில் இல்லை! அதிகாரத்தில் இருந்த காமராசர், சங்கரலிங்கனாரின் கோரிக்கையை ஏற்று வாக்குறுதி தரவில்லை; வாக்குறுதி தராவிட்டால் போகிறது; எல்லோருக்கும் கூறுகிற 'ஆகட்டும் பார்க்கலாம்' என்பதாவது கூறியிருக்கலாம் -- அதுவும் இல்லை! சங்கரலிங்கனார் உயிர் துறந்தார்! அவரது பிணத்தை மதுரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள் --- உறவினரிடம் தராமல்!

"இப்போது காங்கிரசுக்காரர்கள், 'எங்கள் கட்சிக்காரரின் சவத்தை தரப் போலீசு மறுக்கிறது' என்று அவசரப்பட்டு அறிக்கை விடுகிறார்கள்! காங்கிரசு ஆண்டபோது, சொந்தக் கட்சிக்காரரின் பிணத்தையே சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்க மறுத்தார்கள்! மருத்துவமனையில் பிரேத விசாரணை நடந்தது எதற்கு? -- உண்ணாநோன்பிருந்த அவர் எப்படிச் செத்தார் என்பதற்கு!

"**அந்த ஒப்பற்ற தியாகியைக் கொன்றது விஷக் கிருமிகளல்ல --- நஞ்சு அல்ல --- பட்டினி அல்ல --- பசி அல்ல --- நாட்டை ஆண்ட காங்கிரசு தான் கொன்றது என்பதை, நாடு அப்போது உணர்ந்து கொண்டது!**

"**பிரேத விசாரணைக்குப் பிறகு கூட சங்கரலிங்கனார் சவத்தை சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கவில்லை! போலீசே அதை அடக்கம் செய்தது!**

"**மயானத்தில் ஒரு அனுதாபக் கூட்டம் போடக்கூட அனுமதி தரவில்லை அவர்கள்!**

"**இப்படி ஒப்பற்ற தியாகி சங்கரலிங்கனார்-பாரத மணிக்கொடி ஏந்தி பணிபுரிந்தவர் -- சுதந்திரத்திற்காகச் செந்நீர் கொட்டவும், சித்திரவதை ஏற்கவும் சிறைச்சாலைகளில் தவமிருக்கும் துணிந்த ஒருவரை-- அன்று தைப் பிணம்போல் புதைத்தார்கள்!**

"**1967-ஆம் ஆண்டுத் தேர்தலில், சங்கரலிங்கனார் அன்று தைப் பிணமாக புதைக்கப் பட்டதுபோல், காங்கிரசு ஆட்சி புதைக்கப்பட்டது!**

"சங்கரலிங்கனாருக்கு மட்டுமல்ல -- சுதந்தர இயக்கத்தின்போது ஆஷ் துரையை சுட்டுக்கொன்ற வாஞ்சி ஐயரின் குடும்பத்திற்கும் உதவி செய்ய முன்வந்தது தி. மு. கழக ஆட்சி!

"தமிழகத்தின் துவக்க கால அரசியலில், நாயக்கர்--நாயுடு--முதலியார்--என்ற பெயர்கள் புகழுடன் விளங்கின; அவர்கள் மூவரும் சாதியை ஒழிக்கப் பாடுபட்டவர்கள்! இருப்பினும், சாதியின் பெயரால் அழைக்கப்பட்டார்கள்!

"நாயக்கர் என்றால் பெரியார் ஈ. வெ. இராமசாமி; நாயுடு என்றால் வரதராசுலு நாயுடு; முதலியார் என்றால் தமிழ்த் தென்றல் திரு. வி. க; அவர்கள் மூவரும் புயற்காற்றுகளாக இருந்தவர்கள்!

"அவர்களில் ஒருவரான வரதராசுலு நாயுடுவின் துணைவியார் ருக்மிணி அம்மாள் அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் இருக்கிறார்.

"இப்படி ஒரு தி. மு. கழகத் தலைவரின் மனைவியார் அரசாங்கக் கட்டிடத்தில் குடியிருந்து காங்கிரசு ஆட்சி நடைபெற்றால், முதல் நோட்டீசு அவருக்குத்தான் வரும்!

"ஆனால் தி. மு. கழக ஆட்சி, மறைந்த அந்தப் பெரியவருடைய துணைவியார் தமது வாழ்நாள் முழுவதுமோ அல்லது அவர் விரும்புகிற வரையிலுமோ அந்த அரசாங்கக் கட்டிடத்தில் குடியிருப்பதற்கு அனுமதி தந்தது!"

**--மு. கருணாநிதி**

(சங்கரலிங்கனார் நினைவு நாள் விழாவில்)

# தஞ்சையிலிருந்து வருகிறது அரிசி

தஞ்சை, அக். 24—

தஞ்சை மாவட்டத்தில் நடைபெறும் குறுவை அரிசி கொள்முதலிலிருந்து, பற்றாக்குறை மாவட்டங்களுக்காக 75 இலட்சம் டன் அரிசி ஒதுக்கப்பட்டிருக்கிறது; இதில் 50,000 டன் அரிசி, சென்னை நகருக்கு அனுப்பப்படும்.

"இதுவரையில் 23,000 டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது; இதில் 11,000 டன் அரிசி வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டன"

என்று, தஞ்சை மாவட்டக் கலெக்டர் தெரிவித்திருக்கிறார்.

## பொதுக்கூட்டங்கள்

## 25--10--68

**சென்னை — திருவல்லிக்கேணி**

திருவல்லிக்கேணித் தொகுதி தி.மு.க. சார்பில் காலை 9 மணிக்கு சேப்பாக்கம் சி. என். கே. ரோடில்; தலைவர்: எஸ். ஏ. பாண்டியன்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., கதிரவன் எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக. திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-13) [illegible]